வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**SC.No. 203 / 2024**

வழக்கு சாட்சி **PW 12**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.அழகுலெட்சுமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ச.சவடமுத்து | தொழில் | : காவல் உதவி ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : சவடையன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஜே.புதுக்கோட்டை | வயது | : 38 |
| தாலுக்கா | : ஆத்தூர் | நாள் | : 07.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை:

நான் தற்போது அம்மையநாயக்கனூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.06.2022-ம் தேதி 22.00 மணிக்கு அம்பிளிக்கை காவல் நிலையத்தில் நான் நிலைய பொறுப்பில் காவல் உதவி ஆய்வாளராக பணிப்பொறுப்பில் இருந்த போது ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நாகப்பன்பட்டி, ஆதிதிராவிட காலனியை சேர்ந்த பழனிச்சாமி மகன் பெருமாள் என்பவரிடம் வாக்குமூலம் பெற்றேன். அந்த வாக்குமூலத்தை பெற்றவுடன் கடந்த 05.06.2022ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு காவல் நிலையம் வந்து அம்பிளிக்கை காவல் நிலைய குற்ற எண்.73/2022 இதச.பிரிவுகள் 294(பி), 342, 307 ன் கீழாக வழக்கு பதிவு செய்தேன். புகார் மனு ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகாரின் தன்மைப்படி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9. இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 05.06.2022ம் தேதி காலை 04.00 மணிக்கு சம்பவ இடமான நாகப்பன்பட்டி, ஆதிதிராவிடகாலனி, முத்துலெட்சுமி வீட்டு சந்தில் வைத்து சாட்சிகள் பால்ராஜ், முத்துகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ,10 ஆகும். பின்னர் சாட்சிகளான பெருமாள், முத்துலெட்சுமி, கண்ணம்மாள், நவீன், நிர்மல் ஆகிய சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளையும், சம்பவத்தை கேள்விபட்ட சாட்சியான செல்வக்குமார் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான பால்ராஜ், முத்துக்கிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரிகளான ரவிக்குமார், மணிகண்டன் ஆகிய இருவரையும் 05.06.2022ம் தேதி காலை 05.00 மணிக்கு வெரியப்பூர் பஸ்டாப் அருகில் வைத்து

கைதுக்கான காரணம் கூறி கைது செய்தேன். காலை 05.15 மணிக்கு எதிரி ரவிக்குமார் என்பவரிடம் எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ, ஆசைவார்த்தைகளோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சுப்பிரமணி, பழனிச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். சாட்சிகளிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரிகள் சம்பவத்தில் பயன்படுத்திய கத்தியை 05.06.2022ம் தேதி காலை 06.45 மணிக்கு நாகப்பன்பட்டி, ஆதிதிராவிட காலனி, முத்தாலம்மன் கோவில் அருகே உள்ள முட்புதறில் வைத்திருந்த கத்தியினை சுமார் 22 செ.மீ நீளமுள்ள சிவப்பு, புளு, வெள்ளை நிறம் கலந்த கைப்பிடி பாகம் 10 செ.மீ ஆகும். கத்தியின் கூர்முனையுடன் இரும்பு பாகம் சுமார் 12 செ.மீ உள்ள கத்தியினை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ,11. சாட்சிகள் சுப்பிரமணி, பழனிச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். படிவம் 91 னை அன்றைய தினமே தயார் செய்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.12. பின்னர் ஆஜர் எதிரிகள் இருவருக்கும் சட்ட நிலைப்பாடுகளை விளக்கியும் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தும், வழக்கின் புலன் விசாரணை முடிவடையாத நிலையில் இருந்துள்ளதாலும, புகார்தாரர் மருத்துவமனையில் தொடர்சிக்கையில் இருந்து வந்ததாலும், எதிரிகள் சாட்சிகளை கலைத்துவிடுவார்கள் என்ற நோக்கத்திலும், தலைமறைவாக கூடும் என்ற காரணத்தினாலும், ஆஜர் எதிரிகளை நீதித்துறை நடுவர் முன்பு 05.06.2022ம் தேதி 15.30 மணிக்கு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணையை முடித்து தொடர்ச்சியான புலன் விசாரணைக்காக வேண்டி வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர், ஒட்டன்சத்திரம் வட்டக்காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் பார்வைக்கு பணிந்து சமர்ப்பித்தேன்.

1 மற்றும் 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:

1 மற்றும் 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் திறந்த நீதிமன்றத்தில் முன்னிலையாகி 1 மற்றும் 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் இருந்து குறுக்கு விசாரணை மேற்கொள்ள ஆலோசனை எதுவும் வழங்கவில்லை என்றும் தெரிவித்ததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.07 18:46:43 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்